அசைக்கப்படாமல் இருக்கிற நாங்கள் அசையவேண்டும். (I shall not be moved…….move in Christ)

Praise the Lord:

**Let us pray. ..**

உபவாசத்தோடு, நமது வாஞ்சையையும் விண்ணப்பத்தையும் தேவனிடத்தில் தெரியப்படுத்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றுகூடியிருக்கும் சகோதர சகோதரிகளான உங்களனைவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.
அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாக இருக்கிறார். ஆமென்.

இதோ சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?
நன்மையும் இன்பமும் மட்டுமல்ல…துக்கமும் மனவேதனையும் நமக்கு உண்டானாலும்கூட, நாம் கர்த்தருக்குள் எப்பொழுதும் மகிழ்ந்து களிகூர…..
கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாக இருக்கிறார். ஆமென்.

கர்த்தரின் பிரசன்னத்திலே ஒன்றுகூடியிருக்கும் நம் மத்தியில் உண்டாகும் நன்மையும் இன்பமும் நாளுக்கு நாள் பெருகட்டும். நமக்குள்ளே நம் பெலவீனத்தினாலே துக்கமும் மன வேதனையும் இருக்குமானால், அதை ஒருபுறம் தயவுசெய்து தள்ளிவைத்துவிட்டு,
கர்த்தரின் பிரசன்னத்திலே வரமுடியாமல் உலகத்தினாலே ஆட்கொள்ளப்பட்டு, ஆத்துமாவிலே ஜீவனில்லாமல் வெளியிலே வாழும் சகோதர சகோதரிகளுக்காக, நமக்குள்ளே உண்டாயிருக்கிற மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் கிறிஸ்துவின் அன்பினாலே நம்மை நெருக்கிஏவுகிறதை உணர்ந்தவர்களாக ஒருமனப்பட்டு ஜெபிக்க ஆயத்தப்படுவோம்.

இருபுறமும் கருக்குள்ள பட்டயமான வசனம், ஆவியாயும் ஜீவனாயுமுள்ள வசனம், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிற வசனத்தை ஆண்டவர் நமக்கு ஆசீர்வதித்துக் கொடுப்பாராக. ஆமென்.

கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள். (சங் 125:1)
Those who trust in the LORD *Are* like Mount Zion, *Which* cannot be moved, *but* abides forever. (NKJV)
கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. (சங் 16:8)
I have set the LORD always before me. Because he is at my right hand, I will not be shaken. (NIV)
I have set the LORD always before me: because he is at my right hand, I shall not be moved. (KJV)
நமக்கு பிரச்னைகள், கஷ்டங்கள் வரும்போது,
அதினாலே நாம் கலங்கி தளர்ந்துபோய்விடாமல், சோர்ந்துபோய் விழுந்துவிடாமல் இருக்க கர்த்தர் நமக்கு கன்மலையும், இரட்சிப்பும், உயர்ந்த அடைக்கலமுமாக இருக்கிறார்.
அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

அசைக்கப்படவில்லை.

கர்த்தரின் மகிமைக்கு எதிராக உள்ள சூழ்நிலை நம்மை அசைக்கக்கூடாது.
நாம் அசையவும்கூடாது.

*அதேசமயம் நாம் அசையாமலும் ஒன்றும் செய்யாமலும் அப்படியே இருக்கவும் கூடாது.*

அசைக்கப்படாமல் இருக்கிற நாங்கள் அசையவேண்டும்.

கர்த்தரின் மகிமைக்கு எதிரான சூழ்நிலைகளாலே அசைக்கப்படாமல் இருக்கிற நாம், கர்த்தரின் மகிமைக்காக அசைகிறவர்களாக இருக்கவேண்டும்.

அசைக்கப்படாமல் இருக்கிற நாங்கள் அசையவேண்டும்.

இருபுறமும் கருக்குள்ள பட்டயம் நம் கர்த்தரின் ஜீவனுள்ள வசனம்.

1. கர்த்தருக்குள் சந்தோஷப்படும் காலமும் உண்டு.
2. கர்த்தருக்காக படும் பிரயாசத்தில், துக்கப்படும் காலமும் உண்டு.
   இப்படிப்பட்ட துக்கத்திலும் கர்த்தருக்குள்ளான சந்தோஷம் இருக்கவேண்டும்.

இந்த இரண்டு சூழ்நிலைகளிலும் நம்முடைய சந்தோஷம் நிறைவாக இருக்கவேண்டும்.
ஒன்றிருந்து ஒன்றில்லை என்றால், நமது சந்தோஷம் பரிபூரண சந்தோஷம் ஆகாது.
கர்த்தரின் மேலுள்ள நமது அன்பு பூரணப்படவும் அதன்மூலம் பூரண சந்தோஷத்தை அடையவும் பிரயாசப்படுவோம்….. அப்பொழுது கர்த்தரின் பரிபூரண ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும்.

பிலிப்பியர்/ Philippians 4:4 (பக்கம் 273)
கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் (பிலி. 4:4)
என்று வேதம் சொல்கிறது.
கர்த்தரின் மிகுந்த கிருபையினாலே நம்முடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டுள்ளது.
இதை நினைக்கும்போது,
கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கமுடியும்.
இந்த சந்தோஷம் நமக்குள்ளே எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும.

ரோமர் / Romans 9:1 (பக்கம் 217)
எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது; (ரோமர் 9:1)
என்று வேதம் சொல்கிறது.
கர்த்தரை அறியாதவர்கள்...ஜீவபுஸ்தகத்திலே எழுதப்படாமல் உள்ளவர்களை....
நாம் நினைக்கும்போது,
நமக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாகவேண்டும்.
கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கிற நமக்கு, இந்த மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் நம்மை ஒருபோதும் சோர்வடையச்செய்யாது......அதற்கு மாறாக...
கர்த்தருடைய பிரியத்தையும் கற்பனைகளையும் அறிந்த நாம், கர்த்தரை அறியாதவர்களுக்காக, பிரயாசப்பட, இந்த துக்கம் நம்மை உற்சாகப்படுத்தவேண்டும்.

2 கொரிந்தியர்/ 2 Corinthians 6 வது அதிகாரத்தை தயவுசெய்து எடுங்கள்.... (பக்கம் 249)
*(இந்த வசனங்களை வீட்டிலே தியானத்தோடு வாசியுங்கள். யோசனையில் பெரியவர் உங்களை ஆட்கொள்வார்.)*
நான் ஒருசிலவற்றை வாசிக்கிறேன் நீங்கள் வசனத்தை கவனியுங்கள்....

2 கொரிந்தியர்/ 2 Corinthians 6: 3
இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல்,
எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்.
நாம் அனைவரும் ஏதோ ஒரு விதத்திலே கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள்.....
என்று நமது போதகரும் உதவி போதகர்களும் பல தடவை குறிப்பிட்டிருக்கிறார்கள்.....
எனவே இந்த வசனம் நமது ஊழியக்காரர்களுக்கு மட்டுமல்ல.
நாம் அனைவரும் எடுத்துக் கொள்வோம்.

2 கொரிந்தியர்/ 2 Corinthians 6: 4
மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும்,..........
............*இப்படி பல காரியங்களை சொல்லி முடிவிலே...*

2 கொரிந்தியர்/ 2 Corinthians 6: 10
**துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும்,.....**
.... *இன்னும் பல காரியங்களை குறிப்பிட்டு....*
எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்.
*(இந்த வசனங்களிலுள்ள ஒவ்வொரு வார்த்தைகளும் நம்மிலே எப்படி ஜீவிக்கிறது என உங்கள் தனிப்பட்ட தியானத்தில் தியானித்துப்பாருங்கள்.)*
ஞானத்தையும் உணர்வையும் கொடுக்கும் ஆவியானவர் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்வாராக.
நாம் ஒவ்வொருவரும் இப்படியாக எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோமா?.
என சிந்தித்துப் பாத்தால்......
நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?
என்ற வசனத்தை ஆவியானவர் நினைவில் கொண்டுவருவார்.

நம் துக்கம், இரட்சிக்கப்படாத மக்களுக்காக உண்டாகி,
கர்த்தருக்குள் நாம் பிரயாசப்படுவோமானால்,
நம் துக்கத்தை கர்த்தர் சந்தோஷமாக மாற்றுவார். ஆமென்.

அப்போஸ்தலர்/Acts 17:26-27 (பக்கம் 188)
மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்;
கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.

அவருக்குள் நாம் இருப்பதால், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.
Since we are living in HIM, he is not far from each one of us.
(கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் சமீபமானோம்.)
அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல.

அடுத்த வசனத்தில் முதல் பகுதியை மட்டும் வாசியுங்கள்....
அப்போஸ்தலர்/Acts 17:28
ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; .......
'For in him we live and move and have our being.'

கிறிஸ்துவுக்குள் நாம் அவருக்காக பிழைக்கிறோம், அவருக்காக அசைகிறோம், அவருக்காக இருக்கிறோம்;
**உலகத்தினாலே அசைக்கப்படாமல் இருக்கிற நாங்கள் கிறிஸ்துவுக்காக அசைவோம். ஆமென்.**
அதேசமயம்.....
உலகத்திற்கு அசைகிறவர்களை கிறிஸ்துவுக்குள்ளாக அசைகிறவர்களாக மாற்ற வாஞ்சிப்போம்.

கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும் கிறிஸ்து தூரமானவரல்ல என்பதை,
எப்படியாகிலும் சொல்ல நாம் தொடர்ந்து பிரயாசப்படுவோம்...
அதற்கான தகுதியும் வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறதே என பல நேரங்களிலே....
எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாகிறது.
ஆகிலும் நான் சோர்ந்து போகவில்லை.
சோர்ந்துபோகாத நம் தேவன், நம்மையும் சோர்ந்து போகவிடார். ஆமென்.

கர்த்தருடைய கிருபையினாலே, நம்முடைய பிரயாசங்களிலே ஒரு சில.........

1. இரட்சிப்புக்குள் வந்தவர்களை, இரட்சிப்பு நிறைவேறி பூரணப்பட, முடிவுபரியந்தம் நிலைத்திருக்க, அவர்களை வளர்க்க பிரயாசம்.
   We make effort for those who saved by God Grace, sothat they stay in Christ and grow in Christ towards reaching the perfection.
   *(இது நம் போதகர்களுக்கு கர்த்தர் கொடுத்துள்ள பொறுப்பு. இவர்களுக்காக நாம் ஜெபித்துக்கொள்வோம்.)*
2. இரட்சிக்கப்படாத நம்மோடு இங்கு வாழ்கிற உறவினர்களுக்காக பிரயாசம்.
   We make effort for our Relatives living around us to bring them to Christ.
3. இரட்சிக்கப்படாத நமமோடு இங்கு வாழ்கிற நண்பர்களுக்காக பிரயாசம்.
   We make effort for our Friends living around us to bring them to Christ.
4. இரட்சிக்கப்படாத வெளிநாட்டிலே வாழ்கிற உறவினர்களுக்காக பிரயாசம்.
   We make effort for our Relatives living abroad to bring them to Christ.
5. இரட்சிக்கப்படாத வெளிநாட்டிலே வாழ்கிற நண்பர்களுக்காக பிரயாசம்.
   We make effort for our Friends living abroad to bring them to Christ.
6. இரட்சிக்கப்படாத இந்த ஆலயத்தை சுற்றிலும் வாழ்கிற மக்களுக்காகவும் பிரயாசம்.
   We make effort for the people living around Church to bring them to Christ .
7. ……………………………………………………………………..
8. …………………………………………………………………….

இது ஒரு உதாரணத்திற்காக உங்களுக்கு குறிப்பிடுகிறேன்.
இப்படி ஒவ்வொரு திருச்சபைகளும் அவைகளை சுற்றியுமுள்ள மக்களுக்காகவும் வாஞ்சித்து கர்த்தருக்குள் பிரயாசப்படுமானால், இந்த நகரம் கர்த்தருக்குள் களிகூறும்.

இது எப்படி ஆகும் என வியாகுலப்படாதீர்கள்.
நம்மாலே கூடாதது தேவனாலே கூடும்
கிறிஸ்து நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல

ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். என்று வேதம் சொல்கிறது. (யோவான் 14: 23)

*இந்த வசனம் நம்மிலே வளரட்டும்...*

கிறிஸ்துவுனுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது ஆண்டவரே. (2 கொரி. 5:14)

*இந்த வசனம் நம்மிலே வளரட்டும்...*

நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. (2 கொரி. 4:16)

*இந்த வசனம் நம்மிலே வளரட்டும்...*

*கர்த்தருக்குள் பிரயாசப்படுவோம்*

அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். (அப் 4:31)

சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. (அப் 16:26)

இடம் அசைந்தது, பூமி அதிர்ந்தது. இப்பொழுது நாங்கள் உமக்குள் அசைகிறோம். ஆண்டவரே. **உலகத்தினாலே அசைக்கப்படாமல் இருக்கிற நாங்கள் கிறிஸ்துவுக்காக அசைகிறோம். ஆமென்.**

அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; என்று வேதம் சொல்கிறது.

நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பிக்க, நம்மை ஒப்புக்கொடுத்து தயவுசெய்து எழுந்து நிற்போம்....

உயிர் வாழும் நாட்களெல்லாம்
ஓடி ஓடி உழைத்திடுவேன் - நான்
அழைத்தீரே உம் சேவைக்கு – என்னை
அதை நான் மறப்பேனோ

எஜமானனே என் இயேசு ராஜனே – 2
எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம்
உம் சித்தம் செய்வதுதானே – என்
எஜமானனே எஜமானனே
என் இயேசு ராஜனே

## Let us pray. ..

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.